முருகப்பெருமான் துணை

**மகான் வரதரிஷி அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.06.2022, திங்கட்கிழமை

1. பரமானந்த ஞான குருவே
பரபிரம்மனாக வந்த குருவே
சரவணச் சுடரேற்றி அருளும்
சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது விடைதிங்கள்
வரங்களென முப்பான்திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 30 ம் நாள், 13.06.2022 திங்கட்கிழமை)
வரதரிஷி யானும் அருளாசிதனை
3. ஆசிதனை உலகநலமுற உரைப்பேன்
அரங்கன் மகா அவதாரம்
வாசிவென்ற ஞானிகளே ஏற்று
வலம்வந்து சூட்சும வடிவில்
4. வடிவில் அரங்கனுடன் இருந்து
வல்லமை கூட்டி காப்புத்தர
தேடியே கலியுக மக்கள்
தேசிகன் அருமை தெரிந்து
5. தெரிந்து வந்து இணைந்து
தொண்டு செய்து இனிதே
பரிந்து தரும வழிகள் தனை
பணிவுடன் ஏற்றுச் செய்துவர
6. வருகவே மக்களிடை மாற்றம்
வாசி வசம் ஆகும் வண்ணம்
தருமகுணம் தயவு குணம்பெருகி
தனித்துவமும் கூடி இனிதே
7. இனிதே வரும் மக்களெல்லாம்
இறை அருளாக குருவருளை
கனிவேலவன் வடிவான அரங்கன்
கருணைவழி பெற்று நன்கு
8. பெற்றுமே உலக மக்கள்
பேரின்ப வாழ்வு தன்னை
உற்றதொரு அரங்கன் வழி
உயர் ஞானமாக அடைந்து
9. அடைந்துமே கலியுகமக்கள்
அனைவரும் அரங்கன் வழி
தடையற ஞானிகள் ஆகி
தவபலமும் தரும பலமும் அடைவர்

10. அடையவே ஞானவான்களின்
ஆற்றல் மிக்க சபையாகி
தடையற பேருலகம் தானும்
தக்கதொரு ஞானவான்கள் தலைமை

11. தலைமை கண்டு ஞானஆட்சி
தவராசன் ஆசிபட அடையும்
ஊழலில்லா ஞான வழிகாட்டலாகும்
உரைத்திட்ட அருளாசி முற்றே

–சுபம்–